சிறப்பிதழ்
**Special Issue**

***Chief Editor***
*Dr. M. Sadik Batcha*

***Advisory Editor***
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*



௩-௪ பங்குனி ௨௦௫௨
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X


# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*


Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal


சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்) வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**


முனைவர் ம. கவிதா
முனைவர் செ. ஜெயந்தி



***Published by***

**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-5
Part -5

ISSN : 2321 - 984X


| | | |
|---|---|---|
| 202. ராம்பிரசாத் | இரண்டு கவிதைகள் - மதிப்பீடு | 1097-1100 |
| 203. சு. சந்திரகுமார் | போர்க்கால வாழ்வியல் வெளிப்படும் குழந்தை. ம. சண்முகலிங்கத்தின் மண்சுமந்தமேனியர் நாடகமும் - ஓர் ஆய்வு | 1101-1107 |
| 204. பெ. சுமதி | இனவரைவியல் நோக்கில் அளம் புதினம் | 1108-1116 |
| 205. பா. சாந்தி | சங்க இலக்கியங்களில் ஓணம் விழா | 1117-1120 |
| 206. க. ரேணுகா தேவி | தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் | 1121-1124 |
| 207. க. லோகிதா | சட்டைமுனி சித்தர் காட்டும் வாழ்வியல் வழிகள் | 1125-1128 |
| 208. வை. கஜேந்திரன் | சங்க இலக்கிய மருத நில இடமேலாண்மை | 1129-1132 |
| 209. ச. மாசிலா தேவி | சங்க இலக்கியம் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள் | 1133-1137 |
| 210. பொ. அருள் | நிலவியல் அடிப்படையில் மருதத்திணை கருப்பொருள்கள் | 1138-1142 |
| 211. த. ஆனந்தன் | பொருண்மையியல் நோக்கில் அகநானூறு-ஓர் அறிமுகம் | 1143-1145 |
| 212. பா.கிருஷ்ணமூர்த்தி | சிலப்பதிகாரத்தில் விலங்கினங்களும் பறவைகளும் | 1146-1151 |
| 213. அ. அசோகன் | சு. தமிழ்ச்செல்வியின் படைப்புகளில் அளம் காட்டும் வாழ்வியலும் வறுமையும் | 1152-1156 |
| 214. இரா. விபாஸ்ரீ & ச. மல்லிகா | நற்றிணையில் வேளாண் மேலாண்மைச் சிந்தனைகள் | 1157-1162 |
| 215. VIJAYA PRABHA V | IMPACT OF SKY YOGA AND ASHTANGA YOGA AMONG BOYS STUDENT ON ENDURANCE | 1163-1167 |
| 216. ப. சுந்தரமூர்த்தி | சங்க இலக்கியத்தில் உயிரின நடத்தைகளும் மனிதச் செயல்களும் | 1168-1175 |
| 217. ர. தேவிலட்சுமி & வெ. இராமதாஸ் | முதியவர்கள் சமூகத்தின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்கள் - வேதாத்திரிய பார்வையில் முதுமை | 1176-1180 |
| 218. சீ. அகல்யா | சீவக சிந்தாமணி பதிப்பும் உ. வே. சாமிநாத ஐயாவின் வாழ்வியலும் | 1181-1185 |
| 219. R.GNANAM&A.M.SONAL | சங்ககால மக்கள் வாழ்வியல் | 1186-1189 |
| 220. க. ஹேமலதா | நான்மணிக்கடிகை உணர்த்தும் பெண்ணியச் சிந்தனைகள் | 1190-1193 |
| 221. பி. இந்திராணி | பால்பொருள் உற்பத்தியில் பழந்தமிழர் தம் பெண்டிர் பங்களிப்பு | 1194-1197 |
| 222. மா. ஜமுனாராணி & தி. சாந்தி | யோகாவின் வளர்ச்சியும் தற்காலத்தில் அதன் அவசியமும் | 1198-1203 |
| 223. ஜ. ஜான்சிராணி | மலேசியத் தமிழர்களின் வாழ்வியல் சிறுகதைகளின் ஊடாக..! | 1204-1210 |
| 224. H. ஜோயல் குரு | தமிழர் நாட்டுப்புற இசைக்கருவிகள் | 1211-1216 |
| 225. க. கலைவேந்தன் | மணிமேகலை முன்னையப் பதிப்பு வரலாறு | 1217-1221 |
| 226. ந. கமலஹாசன் | பா. விஜய் கவிதைகளில் தொன்மமும் படிமமும் | 1222-1225 |
| 227. து. மர்பி | தமிழ்ச் சிறுகதைகளில் விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் | 1226-1230 |
| 228. கு. கங்காதரன் | திரையிசைப் பாடலில் மைல்கற்கள் | 1231-1240 |
| 229. வா. கவிதா | இலக்கண இலக்கியங்களில் தமிழர் வாழ்வியல் | 1241-1244 |
| 230. சா. மஞ்சுளா | பண்டையத் தமிழர்களின் நம்பிக்கைகள் | 1245-1249 |
| 231. ஆ. முருகன் | கந்தபுராணம் கற்பிக்கும் கந்தன் | 1250- 1253 |
| 232. மு. நாகராஜன் | அறநூல்களில் நட்பாராய்தல் | 1254-1259 |
| 233. ஜி.டி. பன்னீர் செல்வம் | பக்தி இலக்கியங்களில் வாழ்வியல் திருவாசகம் | 1260-1264 |
| 234. மு. பார்வதி | கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பங்கு | 1265-1268 |
| 235. மா. பெரியசாமி | சங்ககால மருத்துவமும் சிட்லிங் மலையாளி பழங்குடிகளின் மருத்துவமும்- ஓர் ஒப்பீடு | 1269-1272 |
| 236. வி. இராமு | பழந்தமிழ் இலக்கியத்தில் சூழலியல் நோக்கு | 1273-1275 |
| 237. அ. சலின் சியாமளா | தமிழ் இலக்கியத்தில் திருமால் வழிபாடு | 1276-1281 |
| 238. ச. சசிகலா & இரா. ரம்யாமகேஸ்வரி | ஐங்குறுநூறு தோழிக் கூற்றுப் பாடல்களில் மெய்ப்பாடு | 1282-1287 |
| 239. பா. சிவசங்கரன் & க. செல்வராஜ் | ஐங்குறுநூறு - கபிலர் பாடல்களில் உரையாடல் | 1288-1292 |
| 240. ச. சோமசேகர் | ஜெயமோகன் நாவல்கள் காட்டும் உளவியல் சிந்தனைகள் | 1293-1296 |
| 241. நா. ஸ்ரீரேகா | புறநானூற்றில் அன்பும் அறனும் | 1297-1300 |
| 242. பொ. வாசலிதேவி | தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் | 1301-1304 |
| 243. ச. வீரபத்திரன் | குறுந்தொகையில் வாழ்வியல் விழுமியங்கள் | 1305-1308 |
| 244. VIJAYAKUMAR. N & MURALI. M | A STUDY ON FINANCIAL MANAGEMENT CONCEPTS IN THIRUKURAL | 1309-1312 |
| 245. க. செந்தமிழ்செல்வி & பெ. சுந்தரமூர்த்தி | வளமான வாழ்வு நல்கும் யோக உணவு முறைகள் மற்றும் யோகப் பயிற்சிகள் | 1313-1319 |
| 246. அ. ரதிரூபி & ச. தேவநேசம்மேபல் | தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் அடிப்படையிலான "நா. பார்த்தசாரதியின் கபாடபுரம்" | 1320-1323 |
| 247. சி. கௌசல்யா | தமிழர் இலக்கியத்தில் வேளாண்மை நுட்பம் | 1324-1327 |
| 248. க. சிவராஜ் | பாரதியார் வாழ்க்கையும் அரசியல் கொள்கையும் | 1328-1332 |
| 249. செ. தங்கராஜ் | நற்றிணை மருத்திணைப்பாடல்களின் வழி தமிழர் வாழ்வியல் | 1333-1335 |
| 250. கே.ஆர். கமலாமுருகன் | சங்கத்தமிழ் நவிலும் இல்லறம் எனும் நல்லறம் (தொகைநூல்கள் முன் வைத்து) | 1336-1339 |
| 251. ப. சுமதி | சங்ககால விளையாட்டுகளில் சி.சு. செல்லப்பா கதையில் ஓர் ஒப்பீடு | 1340-1344 |


Published by : Raja Publications, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : The Printing House, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431 2420121

# அறநூல்களில் நட்பாராய்தல்

**முனைவர் மு. நாகராஜன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

## நட்பு – விளக்கம்

அன்பு என்னும் உணர்வை ஒருவர் உள்ளத்தில் இன்னொருவர் உண்டாக்குவதே நட்பாகும். அது இருமனங்களின் ஆத்மார்த்தமான உறவினைக் குறிக்கிறது. நட்பு மனிதனைப் பண்புள்ளவனாகவும் நாகரீகமுள்ளவனாகவும் மாற்றுகிறது. நட்புக் கொள்வது என்பது முகத்தளவில் மகிழ்ந்திருப்பது அன்று. ஒத்த உணர்வால் ஒன்றுபடுவதாகும்.

நட்பு மனித வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. ஒருவன் தன் வாழ்க்கையில் வீடுவாசல்களையும் சொத்து சுகங்களையும் உருவாக்கிக் கொள்ளுதலையும்விட அது மேலானது; எல்லா நிலைகளிலும் மனிதனுக்குப் பாதுகாப்பினைக் கொடுக்கிறது. துன்பம் தரும் நாட்களிலும் உடனிருந்து காக்கிறது.

திருக்குறள் ஆராய்ச்சி என்னும் நூல் நட்பு என்னும் சொல் உறவினையே குறிக்கிறது என்று கூறுகிறது.

**"நட்பு என்பது நள் என்னும் வேர்வழியாக வந்தசொல். நள் + பு = நட்பு; நள்ளுதல் - நெருங்குதல்; செறிதல்"** (இரா. இளங்குமரன், திருக்குறள் ஆராய்ச்சி, ப. 6) மனம், மொழி, மெய்களின் ஒத்த தன்மையால் காணப்படும் உறவே நட்பு.

நட்பென்பது பேசி சிரித்துக் காலத்தைப் போக்கும் பொழுதுபோக்கு அம்சமோ காற்று தேவையென்றால் திறந்து கொள்ளவும் வேண்டாம் என்றால் மூடிக்கொள்ளவும் செய்யும் வசதியான சாளரமோ அன்று. மனித உடலாகிய ஆடையில் மிகவும் நுட்பமான உணர்வாகிய இழையாக நட்பு விளங்குகிறது.

"குறள் காட்டும் உறவுகள்" என்னும் நூலில் பொற்கோ, **"நட்பு என்பது கோடுகளைக் கடந்து கூடுவது;. சுயநலமில்லாதது; எதிர்பார்ப்பு இல்லாதது"** (ப. 7) என்று சுயநலமற்ற எதிர்பார்ப்பில்லாத தன்மையே நட்பு என்று கூறுகிறார்.

வெவ்வேறு இடங்களில் வசித்தாலும் ஒருவர் எண்ணுவதை மற்றொருவர் உணர்தலே உண்மையான நட்பு. இதனை, **"உள்ளம் ஒன்றிய இருவர் வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் ஒருவர் நினைப்பது இன்னொருவர் நெஞ்சத்தில் படியும்"** சேயோன் (ப. ஆ.), திருக்குறள் சிந்தனை முத்துக்கள், (ப. 67) என்ற கூற்றில் சேயோன் உணர்த்துகிறார்.

சிந்தனைச் செம்மலர்கள் என்னும் நூலில் கோவேந்தன், **"உறவுகளில் உண்மையாயிருப்பது, பேச்சில் தெளிவாயிருப்பது இவைதாம் நட்பு"** (தா. கோவேந்தன், சிந்தனைச் செம்மலர்கள், ப. 44) என்று கூறுகிறார்.

உறுதியுடன் நீடித்து நிற்கும் நட்பென்பது இளமையில் தொடங்குவது. அதுதான் நிலைத்து, நிறைந்த இன்பத்தை அளிக்கும். ஆய்வுக்கோவை என்னும் நூல், **"நட்பு என்னும் உறவு ஒன்றுபட்ட மனமுடைய இருவரிடையே மலருவது"** பாலசுப்பிரமணியன் சிற்பி (ப. ஆ.) இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், ஆய்வுக்கோவை 2003, (ப. 142) என்று நட்பிற்கு விளக்கம் அளிக்கிறது.

சோர்வினாலோ அறியாமையாலோ செருக்கினாலோ சிலவேளைகளில் ஒருவர் வழிதப்பி நடக்கும்போது தவறுகளைச் சுட்டி இது

என்று இடித்துரைத்து அவரை தவறு நெறிப்படுத்தும் நட்புதான் உண்மையான நட்பாகும்.

சான்றோர் நட்பு பிறைத்திங்களைப் போல ஒவ்வொரு நாளும் முறைமுறையே வளரும் தன்மையுடையது என்பதை.

"பெரியவர் கேண்மை பிறைபோல நாளும் வரிசை வரிசையா நந்தும்"

என்ற நாலடிப் பாடலும் (பா. 125) வலியுறுத்துகிறது.

பனைமரத்திற்கு ஓரிருநாள் நீர்வார்த்து நிறுத்திவிட்டாலும் நெடுங்காலம் வளர்ந்து உண்ணுவதற்கு நுங்கு தரும். தொடர்ந்து தந்துகொண்டே இருக்கும். நல்லவர் நட்பும் இத்தகையதே என்னும் கருத்தினை

"எண்ண அரும் பெண்ணைப் போன்று
இட்டஞான்று; இட்டதே,
தொன்மை உடையார் தொடர்பு"

சமண முனிவர்களின் பாடல் (216) உரைக்கிறது.

"நல்லோர் செயுங் கேண்மை நாடோறும் நன்றாகும்"

என்னும் நன்னெறிப் பாடலும் (38) நல்லோர் நட்பு நாளும் வளர்ந்து நன்மை அளிக்கும் என்கிறது. "தோய்ந்தாருள் தோய்ந்தான் எனப்படுதல்" என்னும் பாடலில் (82) நல்லாதனார் நண்பர்களால் நல்ல நண்பன் எனக் கொண்டாடப்படுதலே நல்லவர் குணமாகும் என்கிறார்.

நல்ல இயல்புள்ளவர்களுடன் நட்புச் செய்தலே நல்லொழுக்கமாகும். நட்பு, ஆசாரம் எட்டில் ஒன்றாக உள்ளது. இதனை, "நல்லிணக்கத்தோடு நட்டல்" என்னும் ஆசாரக்கோவைப் பாடல் (1) வழி அறியமுடிகிறது.

நட்பு பற்றி மேற்கண்டவாறு பல்வேறு நூல்களும் அறிஞர்களும் விளக்கம் தருகின்றனர். அவற்றைச் சார்ந்து நோக்குகையில் நட்பு என்பது கீழ்க்கண்ட இலக்கணங்களைக் கொண்டது என்பதை உணர முடிகிறது. நட்பு என்பது ஒருவருடைய வாழ்வில் இன்றியமையாது தேவைப்படுவது. ஒருவருக்கு இனம் புரியாத மகிழ்ச்சியை உண்டாக்குவது. மனம், மொழி, மெய் என்ற மூவகையாலும் ஒத்த நட்பு உள்ளதமானது.

நல்ல நட்பு நன்றியுள்ள நாய்போல எப்போதும் எங்கும் துணையாக வருவது. உயர்ந்தவர்களின் நட்பு வளர்பிறைபோல நாளும் வளர்ந்து ஒளிவிடும் தன்மை கொண்டது. எனவே மேற்கண்ட அரும்பண்புகளைக் கொண்ட நட்புடையாரை பொருள் கொடுத்தாவது பெற்றுக்கொள்ள வேண்டும் அதனால் நட்பு கொள்ளும் இருவருக்கும் நன்மை. நட்பு பற்றிய உண்மைகளை உணர்ந்து நம் தமிழர் பாரம்பரிய மரபினை பாதுகாத்து வாழ்ந்தால் தமிழினம் தரணியில் வெல்வது உறுதியே.

## நட்பாராய்தல்

ஒருவனோடு நட்பு கொள்வதற்கு முன்பே அவனுடைய உறவு நமக்குப் பொருந்துமா என்று பலமுறை எண்ணிப் பார்த்து நட்புக் கொள்ளவேண்டும். ஆராயாத நட்பினால் துன்பமே உண்டாகும். நமது முன்னோர் அனைத்தையும் அறிந்தே வாழ்ந்தனர்.

"நாம் ஒருவரிடம் நண்பராகச் சேரவேண்டுமென்றால் அவர் நல்லவரா? ஒழுக்கமானவரா? என நன்கு ஆராய்ந்து சேரவேண்டும். ஏனெனில் அவர் தீயவராக இருந்தால் உலகம் நம்மையும் தீயவராகவே பார்க்கும். எனவேதான் நல்லவரிடம் சேரவேண்டும். தீயவருடன் சேரக் கூடாது"

எனத் தமிழ்ப்பிரியன் (அருணாவின் பழமொழிகளும் விளக்கங்களும், ப. 68) கூறுகிறார்.

திருக்குறள் ஆராய்ச்சி என்னும் நூல் ஆராய்ந்து நட்புக் கொள்வதன் அவசியத்தை, "நச்சு மரமே என்றாலும் தான் வளர்த்துவிட்டதை வெட்டுவது அரிது என்பது வழக்காறு. ஆதலால் ஆராய்ந்து நட்டலே நலஞ்செய்வது" (இரா. இளங்குமரன், திருக்குறள் ஆராய்ச்சி, ப. 12) என்னும் கூற்றில் எடுத்துரைக்கிறது.

"ஆராயாது கொள்ளும் நட்பு கெடுதியே தரும் என்பதை, "நாடாது நட்டலின் கேடில்லை" என்னும் குறளும் (791) உணர்த்துகிறது.

"ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை, கடைமுறை
தான்சாம் துயரம் தரும்"

என்னும் திருக்குறள் (792) நட்புக் கொள்ளப் போகிறவரின் குணங்கள், செயல்களால் நல்லவரா எனப் பலகாலும் பலவழிகளிலும் ஆராய்ந்து தெளிந்தபின் ஒருவரோடு நட்பை வளர்த்துக் கொள்ளாதவன், பின்னாளில் அவன் சாவதற்கே காரணமான துன்பங்களை அவர் பகைவர் தோற்றுவிக்கும் முன்பு தீய நண்பர்கள் தோற்றுவித்துவிடுவார்கள் என்று கூறுகிறது.

நண்பர்களைத் தேர்வு செய்யும்முன் அவனது குடும்பம், பழக்கவழக்கம், பண்பு, ஒழுக்கம், குணநலன்கள் அனைத்தையும் ஆராய்ந்தே நண்பனாக ஏற்றுக் கொள்ளவேண்டும். நட்பு கொண்டபின் பிரிதல் அறமாகாது. ஆகையால் நண்பனைத் தேர்ந்தெடுக்கும் முன்பே ஆராய்ந்து நட்புக் கொள்ளவேண்டும்.

ஏனென்றால் "நட்பு போலச் சிறந்தது உலகில் வேறொன்றுமில்லை. நட்பு செய்வதற்குத் தகுந்தவரைப் பெறவேண்டும். எல்லோரையும் நட்புச் செய்துவிட முடியாது" தமிழியல் ஆராய்ச்சி, தொகுதி 2, (ப. 90) எனப் புலமை மன்றம் கூறுகிறது.

நட்புக்கொள்ள நினைக்கும் ஒருவன் யாரை நட்புக்கொள்ள நினைக்கின்றானோ அவனது குணத்தையும் குடிப்பிறப்பையும் அவன் செய்த குற்றங்களையும் ஆராய்ந்த பின்பே நட்புக் கொள்ளுதல் வேண்டும். இதனை,

"குணனும் குடிமையும் குற்றமும் ——————
——————
—————————————— அறிந்து
யாக்க நட்பு"

என்னும் திருக்குறள் (793) வரிகளால் உணரமுடிகிறது.

"சேரிடம் அறிந்து சேர்" என ஆத்திசூடியும் (50) ஒருவர் தாம் சேரத்தக்க இடந்தானா என்பதை ஆராய்ந்து அறிந்த பிறகே, நட்புக் கொள்ளவேண்டும் என்கிறது. மேலும் நல்ல நட்பை ஆராய்ந்து கண்டறிவது என்பது மேலோட்டமாகக் கணித்து அறியத்தக்கது அன்று. அவர்தம் குடிப்பிறப்பையும் இடையில் மனம் திரிபடையரா என்பதையும் விசாரித்து அறிந்து அதன்பிறகே நட்புக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை,

"இற்பிறப் பெண்ணி இடைதிரியா ரென்பதோர்
நற்புடை கொண்டமையல்லது; ——————
மனமறியப் பட்ட தொன்றன்று"

என்னும் நாலடியார் பாடல் (212) வழி அறியமுடிகிறது.

ஒருவனை நண்பனாகக் கொள்ள வேண்டின் அவனை மட்டுமன்றி அவனோடு சேர்ந்து இருப்பவரையும் ஆராய வேண்டும். ஏனெனில் அவர்கள் இயல்பு பலவகையிலும் ஒத்துப்போவதால் தானே சேர்ந்துள்ளனர். நட்பு நல்லதா கெட்டதா என்று அறியாவிட்டால் பெருந்தீமை உண்டாகும் என்பதைக் கவனத்தில் ஏற்க வேண்டும்.

"அளிந்தார் கணாயினும் ஆராயான் ஆகித்
தெளிந்தான் விரைந்து கெடும்"

என்னும் பழமொழிப்பாடல் (182) ஒருவர் அன்புடையவர் போலத் தோன்றினும் அவரை ஆராயாது நட்புக்கொண்டு ஒருவர் தன் இரகசியத்தை அவரிடம் சொல்லிவிட்டால் அதனால் அவருக்கு அழிவே வந்து சேரும் என்று கூறுகிறது. எனவே நன்கு ஆராய்ந்து தெளிந்த பிறகே நட்பு செய்தல் வேண்டும் என்பது உணரப்படுகிறது.

ஏற்கும் நட்பு

ஒருவரை நன்கு ஆராய்ந்து பார்த்து அவர் நல்லவர் என்பது தெரிந்தபின் அந்நல்லவர்களின்

நட்பை விட்டுவிடக் கூடாது. பொருள் கொடுத்தாவது அவர்களின் நட்பினைப் பெறவேண்டும். வாழ்க்கையைச் செம்மையாக நடத்த அதுபோன்ற உண்மையான நட்பே உறுதுணை புரியும்.

"நல்ல நண்பர்களும் நல்ல நூல்களைப் போலத்தான். நல்ல நூல்கள் படிக்கப்படிக்க மேலும் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கும்; நல்ல நட்பு பழகப்பழக மேலும் பழக வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கும்" பொற்கோ. குறள் காட்டும் உறவுகள் (ப. 10) என்னும் நூல் உணர்த்துகிறது.

"கோட்டுப்பூப்போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாச்சி"

என்னும் நாலடிப்பாடல் (215) கிளையில் மலரும் பூக்கள் மலர்ந்தபின் மடியும்வரை சுருங்காது. மலர்ந்து பின் குவியாத கோட்டுப்பூ போன்றவர் நட்பை விடக்கூடாது என்று கூறுகிறது. இங்குக் கோட்டுப்பூ நல்லவர் நட்புக்கு ஒப்பாகக் காட்டப்படுகிறது. அடுத்து,

"________________ ________________
நாயனையர்
கேண்மை கெழீஇக்கொளல் வேண்டும்
________________ ________________
எறிந்த வேல்
மெய்யதாவால் குழைக்கும் நாய்"

என்னும் நாலடியார் பாடல் (213) நாய்போல நன்றி மறவாப் பண்புடையவர் நட்பையும் தேடி விரும்பி ஏற்கவேண்டும் என்கிறது. மேலும்,

"கருத்துணர்ந்து கற்றறிந்தோர் கேண்மை
யெஞ்ஞான்றுங் குருத்திற் கரும்பு தின்றற்றே"

என்னும் சமண முனிவர்களின் பாடல் (211) அடி நல்ல நட்புக்கு மேலும் ஒரு உவமையைச் காட்டுகிறது. அதாவது ஒவ்வொரு செய்யுளின் கருத்தையும் முற்றுமாக அறிந்து உணர்ந்து தேர்ந்த அறிஞர்களுடன் கொள்ளும் நட்பு எக்காலத்தும் நுனிக் கரும்பிலிருந்து அடிக்கரும்பைத் தின்னுதலுக்கு நிகராகும் என்கிறது. அதாவது நல்லவர்களின் தொடர்பு முதலில் ஒன்றுமில்லாததுபோலத் தோன்றினும், அதுவே இறுதியில் நிலைத்த இன்பத்தைக் கொடுக்கும் என்பதை இதன்வழி உணரமுடிகிறது.

"ஒரா அலும் ஒட்டலும் செய்பவோ" என்னும் நாலடிப்பாடல் (246) அறிவுடையவர்களுடன் ஒருமுறை நட்புக் கொண்டால் போதும். அந்நட்பு என்றும் நிரந்தரமாக இருக்கும் என்றும் அவர்கள் நண்பருடன் சேர்தலையும் பிரிதலையும் செய்பவராக இருக்கமாட்டார்கள் என்றும் கூறுகிறது. அடுத்து,

". . . . . . . . . . . . . . . . தன்கண் பழி
நாணுவானைக்
கொடுத்தும் கொளல் வேண்டும் நட்பு"

என்னும் குறள் (794) தன்மேல் பழி வந்துவிடக் கூடாது எனப் பழிக்கு நாணுபவனுடைய நட்பைக் கொடுத்தாவது கொளல் வேண்டும் என்கிறது.

நல்ல நட்பு என்பது மீண்டும் மீண்டும் பழக வேண்டும் என்ற ஆவலை உருவாக்கும் ஆற்றல் கொண்டது. மலர்ந்து, பின் மடியும்வரை வாடாதத் தன்மை கொண்ட கோட்டுப்பூப் போன்றோர் நட்பையும், கோபத்தில் அடிப்பினும் இட்ட சோற்றை மறவாது நன்றியுடன் காலைச் சுற்றிவரும் நாய் போன்றோர் நட்பையும் தேடிப்பிடித்து விடாது கொளல் வேண்டும்.

நுனியில் இருந்து உண்ண உண்ண சுவையைக் கூட்டிக் கொடுக்கும் அடிக் கரும்பன்ன சான்றோர் நட்பையும் விடாது கொளல் வேண்டும். ஒருவர் மற்றவரிடம் நட்புக் கொள்ளும்முன் அவரை நன்கு ஆராய்ந்து பார்த்தல் அவசியம். ஆராயாது ஒருமுறை நட்புக் கொண்டு பின் பிரிவது நல்ல நட்புக்கு அழகல்ல. எனவே பலமுறை ஆராய்ந்து பார்த்துப் பழகுவதற்கு ஏற்ற பயன் நல்கக் கூடியவன் நட்பையே ஏற்க வேண்டும். அல்லாதார் நட்பைத் தவிர்த்துவிட வேண்டும். அதாவது, கோட்டுப்பூ, நாய், கரும்பன்னார் நட்பைப் போற்றுதல் வேண்டும் என்பது மேற்கண்ட பாடல்கள்வழி உணரலாகிறது.

மேற்கண்ட நல்லோர் நட்பை ஆராய்ந்து பார்த்துத் தேடிக்கொள்ள வேண்டும். அது நிரந்தரமானதாக, என்றும் மாறாதத் தன்மையுடையதாக, பயன் நல்குவதாக அமையும் என்ற கருத்துக்களில் இருந்து நட்பின் சிறப்பும் அவசியமும் பயனும் புலப்படுகிறது.

ஏலா நட்பு

ஏற்கக்கூடிய நட்பைப் பற்றிக் கூறிய சான்றோர் ஏற்க வேண்டாதார் நட்பையும் அடையாளம் காட்டிச் செல்கின்றனர். அதாவது வாழ்க்கைக்குப் பயன்தராத, துன்பம் அளிக்கக்கூடிய பண்புடையவர் நட்பைத் தவிர்த்தல் வேண்டும் என்பது அவர்களின் கருத்து. அக்கருத்தை மக்களுக்கு உணர்த்த அவர்கள் சில உவமைகளை முன் வைக்கின்றனர்.

"யானை அனையவர் நண்பு ஒரீஇ ________

________ யானை
அறிந்து அறிந்தும்"

என்னும் நாலடிப் பாடல் (213) செய்த நன்மையையும் பழகிய நெடுங்காலப் பழக்கத்தையும் மறந்துவிடும் குணமுடைய யானையனையார் நட்பை விலக்கி விடுதல் வேண்டும் என்றும் நன்கு அறிந்திருந்தும் யானை வளர்த்த பாகனையே ஒருநாள் கொன்றுவிடுவதுபோல அத்தகு நட்பால் தீமையே உண்டாகும் என்ற கருத்தையும் உரைக்கிறது. நீண்டநாள் பழகிய நண்பனுக்கே துரோகம் செய்யக்கூடியவனின் நட்பினை கொள்ளக்கூடாது என்பது இதன்வழி உணரலாகிறது.

குளத்தில் பூக்கும் அல்லி, தாமரை ஆகிய பூக்கள் உதயவேளை மட்டுமே மலர்ந்திருக்கும். பின் கூம்பிவிடும். தேவை வந்தபோது மலர்ந்து தேவை முடிந்தபோது குவியும் நீர்ப்பூ இயல்புடையார் நட்பைக் கொள்ளக் கூடாது என்ற கருத்தை,

"________

________ தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல்"

எனும் சமண முனிவர் பாடலால் (215) அறியமுடிகிறது.

அடுத்து பாக்குமர நட்பு கடைத்தரத்தது. ஓயாமல் போற்றிப் பாதுகாத்து தொண்டிருந்தால்தான் பாக்குமரம் காய்த்துப் பலன் கொடுக்கும். இந்த வகை நண்பர்கள் எப்போதும் உதவியை எதிர்பார்த்துக்கொண்டே நட்பு செய்வர் என்பதை, "கடையாயார் நட்பில் கமுகு அனையர்" என்னும் நாலடியார் (216) பாடல் வரி உணர்த்துகிறது.

மேலும் பாம்பை நிகர்த்தவரோடு தொடர்புகொண்டு பின்பு அவருடைய தீக்குணத்தை அறிந்து விலகுவதால் துன்பமே உண்டாகும் என்பதை,

"________ ________
பாம்பொடும் இன்னா
மரீஇ இப்பின்னைப் பிரிவு"

என்னும் நாலடிப் பாடல் (220) உணர்த்துகிறது. அத்துடன்

"கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூட
உற்றுழியுந் தீமை நிகழ் வுள்ளதே"

என்னும் நன்னெறிப் பாடல் (39) கல்லாத அறிவில்லாத தீயோருடன் கொள்ளும் நட்பும் உற்ற காலத்துத் தீமை தருவதாக இருக்கும் என்கிறது.

நட்பு செய்வதற்குமுன் பன்முறை ஆராய்தல் சிறந்தது. எனவே தீயவர் நட்பினை கொள்ளக்கூடாது. அதாவது வளர்த்தவனை கொன்றுவிடும் யானை அன்னார் நட்பை விலக்கவேண்டும். தேவை வந்தபோது மலர்ந்து தேவையில்லாதபோது குவியும் நீர்ப்பூ இயல்புடையார் நட்பினைக் கைவிடுதலே சிறந்தது. அத்தோடு உதவியை எதிர்பார்க்கும் நட்பை, போன்றவர் தீயகுணம் கொண்ட பாம்பினைப் போன்றவர்

...பினையும் விலக்குதலே நன்று. கல்லாதார் ...பினால் தீமையே உண்டாகும் ஆராய்து அறிந்து ...வருடன் நட்பு கொண்டாலும் நல்லவர் தொடர்பால் ...ழ்வு சிறக்கும் என்பதை உணருங்கள். வாழ்க்கை ...ரு முறை தான். வாழ்வும் ஒரு முறை தான். ...ந்தோர் சொல்லும் முதுநெல்லிக்காயும் முதலில் ...சக்கும். பின்பு அதுவே இனிக்கும் என்பதை ...றக்கக்கூடாது. ஆராய்ந்து நட்பு கொள்வதால் ...ாழ்வே வசந்தம் என்பதை நமது முன்னோர்கள் ...ணர்ந்ததால் தான் தமிழகம் தரணியில் உயர்ந்த ...டத்தில் இருந்தது என்பதை நம்மால் மறக்கவும் ...றுக்கவும் இயலாது. வாழும் போதும் ...ாழ்க்கைக்கு பிறகும் மற்றவர்களுக்கு ...ழிகாட்டியாக இருப்போம். தமிழரின் ...ன்மானத்தை உலகறியச் செய்வோம்.

## ...துணை நின்ற நூல்கள்


1. இராசமாணிக்கம் பிள்ளை, ம. (உ. ஆ.) பழமொழி நானூறு (மூலமும் உரையும்), சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், அப்பர் அச்சகம், சென்னை -1. மறுபதிப்பு, 1967
2. பாலசுந்தரம் பிள்ளை, தி. சு., நாலடியார் (இளவழகனார் உரையுடன்), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், அப்பர் அச்சகம், சென்னை, டிசம்பர் 2007
3. கோவேந்தன், த., சிந்தனைச் செம்மலர்கள், தனலட்சுமி பதிப்பகம், சென்னை -17, முதற்பதிப்பு, நவம்பர் 2001
4. சேயோன், (ப. ஆ.), திருக்குறள் சிந்தனை முத்துக்கள், மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச்சங்கம், சென்னை-4 முதற்பதிப்பு, டிசம்பர் 2000
5. புன்னைவனநாதன், பு. சி., (உ. ஆ.) ஆசாரக்கோவை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், அப்பர் அச்சகம், சென்னை, டிசம்பர் 2007
6. தமிழ்ப்பிரியன், அருணாவின் பழமொழிகளும் விளக்கங்களும், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை -49 இரண்டாம் பதிப்பு, செப்டம்பர் 2008
7. புன்னைவனநாதன், பு சி, (உ. ஆ) திரிகடுகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், அப்பர் அச்சகம், சென்னை, மறுஅச்சு, டிசம்பர் 2007
8. மயிலை சிவமுத்து, (உ. ஆ) திருக்குறள் (இனிய எளியஉரை), மூவேந்தர் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14, ஏழாம் பதிப்பு, 1989
9. பொற்கோ, குறள் காட்டும் உறவுகள், பூம்பொழில் வெளியீடு, சென்னை, 600 020, இரண்டாம் பதிப்பு, அக்டோபர் 2006
10. இளங்குமரன், இரா., திருக்குறள் ஆராய்ச்சி, விக்னேஷ் வெளியீடு, சென்னை 34, முதற்பதிப்பு 2001
11. ——————————— இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், ஆய்வுக்கோவை, சபாநாயகம் பிரிண்டர்ஸ், சிதம்பரம், முதற்பதிப்பு, மே 2003
12. ——————————— தமிழியல் ஆராய்ச்சி தொகுதி -2, புலமை மன்றம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 5. முதற்பதிப்பு 2002


ல